முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

24.11.2018, சனிக்கிழமை

1. **கனி வேலவனே கருணா மூர்த்தியே**
   **கலிமீட்பின் ஞான அவதாரமாக**
   **கனிவேலவன் சக்தியாக வந்த**
   **கந்தனே ஆறுமுக அரங்கனே**
2. அரங்கனே உன் பெருமை கூறி
   அகிலமதில் **விளம்பி தேள் திங்கள்**
   **வரங்களென அட்டமதிகதி காரி வாரம்**
   **(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 8ம் நாள் 24.11.2018, சனிக்கிழமை)**
   **வழங்கிடுவேன் ஒளி சூட்சும நூலை**
3. நூலை கணம்புல்ல நாயனாரும்
   நிலவுலக நலம் கருதி உரைப்பேன்
   ஞாலமதில் அரங்கமகானின்
   நல் அருள்பலம் பரவுமிடமெல்லாம்
4. இடமெல்லாம் இயற்கை சீற்றம்
   எதிர்மறை சக்தி வழி அழிவுகள்
   இடர்கள் அணுகா பாதுகாப்பும்
   எக்காலமும் வளமை வல்லமை குன்றா
5. குன்றா பூமியாக எங்கும்
   குருராசன் அருளை பெறும் உலகம்
   நன்றான ஞான உலகமாகும்
   ஞானதேசிகன் தொண்டர் படை
6. படைகள் பெருகி சேவையில்
   பன்மடங்கு நிலைகள் உயர
   சோதனை போகா வளர்ச்சி கண்டு
   சுத்தநெறி ஏற்ற மக்களெல்லாம்
7. எல்லோரும் ஞானிகள் ஆளுமைக்கு
   ஏற்றவர்களாகி வருமுலகில்
   வல்லமையான ஆறுமுகப்பெருமானின்
   வரம்கிட்டி தரம் உயருவர்
8. உயர்வான தீட்சை ஏற்றுமே
   உலகமெங்கும் அரங்கன் தலைமை
   தயவை பரப்பி வருகின்றநல்
   தவசீடர்கள் தருமவழி சீடர்களே
9. சீடர்களே அரங்கன் தேடிய
   சித்தி பெறும் ஞானிகள் ஆக ஆகுவர்
   தடையற தொடரும் அன்பர்கள்
   தருமம் தொடர்பில் உள்ளவர்களெல்லாம்

10. எல்லோரும் ஆறுமுகன் ஆளுமையில்
ஏழாம் படை வீட்டு சபை வழி
இல்லாமை என்ற கதி விலகி
எல்லா பலமும் வரமும் பெற்று

11. பெற்றுமே ஞானிகள் ஆவர்
பேருலகே ஞானயுகமாகி
ஆற்றல்பட மாற்றம் காணும்
அறிவித்த ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கணம்புல்ல நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கனிவேலனாம் முருகப்பெருமானின் கருணை சக்தி வடிவமாக ஆனவரே துன்பம்மிக்க இக்கலியுகத்தின் துன்பங்களில் இருந்து மக்களை மீட்டு காத்து ரட்சித்து ஞானயுகம் அமைத்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட கலியுக மீட்பின் ஞான அவதாரமே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 8ம் நாள் 24.11.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே கணம்புல்ல நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கணம்புல்ல நாயனார்.

இவ்வுலகினில் ஆறுமுக அரங்கமகா தேசிகனின் நல்லருள் பலம் பரவுகின்ற இடமெல்லாம் இயற்கை சீற்றங்கள் வராது, எதிர்மறையான சக்திகளால் வருகின்ற அழிவுகள் வராது, பேரிடர்கள் ஏதும் அணுகாது. அரங்கனின் அருள்பலம் உள்ள இடத்தினில் எக்காலமும் பாதுகாப்பும் வளமை குன்றாத நிலையும் வல்லமை குன்றாத பூமியாகவும் இருக்கும்.

குருராசன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருளைப் பெறும் உலகம் வல்லமைமிக்க ஞான உலகமாக ஆகிடும்.

ஞானதேசிகன் அரங்கனின் தொண்டர் படைகள் உலகமெங்கும் பல்கி பெருகி அவை தமது சேவைகளில் பன்மடங்கு நிலைகள் உயர்ந்திடுவர். அவர்கள் வீண் போகாத குற்றமற்ற நேர்மையான வளர்ச்சிகளை காண்பார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் வல்லமைமிக்க தூயநெறிகளை ஏற்கின்ற மக்களெல்லாம் ஞானிகள் ஆட்சி செய்யும் ஞானஆட்சிக்கு ஏற்றவர்களாக ஆகி வருங்காலங்களில் வரவிருக்கும் ஞானஆட்சியில் முருகப்பெருமானின் வல்லமைமிக்க வரங்களைப் பெற்று தரம் உயர்வார்கள்.

உயர்வுமிக்க வல்லமையான தீட்சை உபதேசங்களை ஆறுமுக அரங்கனிடத்து பயபக்தியுடன் பெற்று கடைப்பிடிக்கும் அன்பர்களெல்லாம் வருங்காலங்களில் உலகமெங்கும் அரங்கன் தலைமையில் தயவினை பரப்பி வருகின்ற தயவுமிக்க சீடர்களெல்லாம் தருமங்களை தாராளமாய் செய்கின்ற தருமவழி சீடர்களெல்லாம் அரங்கனின் முழுமையான அருளாசிகளின் பலத்தினால் அரங்கன் தேடிக் கண்ட சித்தி பெறும் வல்லமைமிக்க ஞானிகளாக ஆகிடுவார்கள்.

தடையின்றி தொடர்ந்து தொண்டுகளும், தர்மங்களையும் செய்கின்ற மக்களெல்லாம் முருகப்பெருமானின் ஆட்சியில் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலாகிய ஞானசபை மூலமாக அருள்பலம் பெற்று, இல்லை என்ற நிலையே இல்லாதவாறு ஆகி, எல்லா பலமும் வரமும் பெற்று ஞானிகளாக ஆகிடுவார்கள்.

இந்த பேருலகமே ஞானிகள் ஆட்சி செய்கின்ற ஞானயுகமாக ஆகிடும். ஆற்றல்மிக்க உலகப் பெருமாற்றத்தை அரங்கன் அருளால் இவ்வுலகம் அடைந்து சிறப்படையும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கணம்புல்ல நாயனார்.

–சுபம்–